# ஆற்றல்மிக்க நவமணி செபம்

*(குறிப்பிட்ட அதே நேரத்தில், மணிக்கு ஒரு முறையாக அடுத்தடுத்து ஒன்பது முறை சொல்ல வேண்டிய செபம்).*

ஓ இயேசுவே!"கேளுங்கள் பெறுவீர்கள், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறந்து கொள்ளும்" என்று மொழிந்தீரே, உமது திருத்தாயார் தூய மரியாளின் பரிந்துரை வழியாக நான் தட்டுகிறேன், தேடுகிறேன், கேட்கிறேன். நான் கோரும் இவ்வரத்தை *(நீ கோரும் வரத்தை இங்கே குறிப்பிடுக)* கொடுத்தருளுமாறு கேட்கிறேன்.

ஓ இயேசுவே! "என் பெயரால் நீங்கள் தந்தையைக் கேட்பதெல்லாம் அவர் உங்களுக்கு அருள்வார்" என மொழிந்தீரே, உமது திருத்தாயார் தூய மரியாளின் பரிந்துரை வழியாக என் அவசர மன்றாட்டை *(நீ கோரும் வரத்தை இங்கே குறிப்பிடுக)* அளித்தருளுமாறு, உமது பெயரால் தாழ்ந்த உள்ளத்துடன் உம் தந்தையை இறைஞ்சி கேட்கிறேன்.

ஓ இயேசுவே! "விண்ணும், மண்ணும் அழிந்து போகும்; ஆனால் என் சொற்களோ ஒருபோதும் அழியா", என்று மொழிந்தீரே, உமது திருத்தாயார் தூய மரியாளின் பரிந்துரை வழியாக என் செபம் பலிக்குமென நான் உறுதியாக நம்புகின்றேன்.